நாள். 14.07.2026

இடையீட்டு மனு எண் 7/24 இன் அசல் வழக்கு எண். 28/2022

எ.ம.சா. 1 மாசிலாமணி

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் நெடுஞ்சாலை துறையில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். வாதி தாக்கல் செய்த வழக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியும். 01.03.2022 ல் வழக்கறிஞர் மூலம் நான் வழக்கில் ஆஜரானேன் என்றால் சரிதான். வாதி இடையீட்டு மனு எண் 3/2022 என்ற மனுவை பிராது 2 ம் தபசில் சொத்தை நான் எந்த கட்டுமானமும் கட்டக்கூடாது என தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி மனுவிலும் 01.03.2022 ம் தேதியிலும் வழக்கறிஞர் மூலம் நான் ஆஜரானேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் ஆஜரான நாளிலிருந்து எனது வழக்கறிஞர் மூலம் வழக்கை பின்தொடர்க்கிறேன் என்றாலும் வழக்கு விவரங்களை கேட்டு தெரிந்து கொள்கிறேன் என்றாலும் சரிதான்.

11.03.2022 ல் இடையீட்டு மனு எண் 3/2022 எதிர்வழக்குரை தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் 18.07.2022 ல் வழக்கு 2 ம் தபசில், 1 ம் தபசில் 2 ம் அயிட்ட சொத்தை வழக்கு முடியும் காலம் வரை எவ்வித மாறுதலும் செய்யக்கூடாது (Status quo) என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை வாதி மற்றும் எனது முன்னிலையில் பார்வையிட்டார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையை நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆணையர் அறிக்கையில் IJKL என்பது 2 ம் தபசிலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட பிறகு 2 ம் தபசில் சொத்தில் நான் கட்டுமானம் கட்டியதாக 23.08.2024 தேதியில் வாதி என் மீது மூன்றடைப்பு காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 தான் மேற்படி புகார் மனு என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் சமயம் 2 ம் தபசில் சொத்தில் 8 வாழை மரங்கள் இருப்பதாக மட்டும் அறிக்கையில் குறிப்பிட்டு

இருந்தார் என்றால் சரிதான், ஒரு செட்டும் இருந்தது, அது நிரந்தரமாக இருக்கக்கூடியது அல்ல, தேவைப்படும் சமயம் வைத்துக்கொள்ளக்கூடியது. வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த சமயத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 9 ஆவணத்தில் உள்ள 3,4,6 புகைப்படங்களில் உள்ளது 2 ம் தபசில் சொத்தில் வடபுறமும் மேல்புறமும் கம்பு ஊனப்பட்டு இரும்பு கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் அமைத்ததாக சொல்லும் செட் எந்த வருடம் அமைத்தது என்றால் அமைத்து 6 வருடங்கள் இருக்கும். 29.06.2022 ல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும், இடையீட்டு மனு எண் 3/2022 எதிர்உரையிலும் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரங்களை எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் என் மனைவி மூலம் தெரிந்து கொண்டேன். மேற்படி எதிர்உரையில் தபசில் சொத்தின் வடக்கு பக்கம் மட்டும் கல் ஊன்றி கம்பி வேலி அமைக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

என்னுடைய எதிர்வழக்குரை மற்றும் எதிர்உரையில் 2 ம் தபசில் சொத்தில் செட் இருந்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உண்மையாகவே செட் தற்காலிகமாக அமைத்து எடுக்கக்கூடிய வகையில் வைத்திருந்தால் என்னுடைய எதிர்வழக்குரையில் நான் சொல்லியிருப்பேன் என்றாலும் உண்மை சங்கதிகளை மறைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த மனு விவரங்கள் மற்றும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவண விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 3 புகைப்படம் தற்போது நான் பிராது 2 ம் தபசில் சொத்தில் வடபுறம் மற்றும் மேல்புறம் கம்பி மற்றும் கல்வேலியை அகற்றி காம்பவுண்ட் சுவரை அமைத்ததை காட்டுகிறது என்றால் சரிதான், வாதி தான் 2 ம் தபசில் சொத்தின் வலதுபுறம் காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளார்.

நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடும் சமயத்தில் மேற்படி வலதுபுறம் காம்பவுண்ட் சுவர் இருந்தது என்றால் சரிதான். நான் 5 வருடத்திற்கு முன்பு செட் அமைத்ததற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் கிடையாது. நான் கட்டுமானம் கட்டியது சம்மந்தமாக தான் ம.சா.ஆ 3 புகார் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வழக்கில் Status quo உத்தரவு இருப்பது தெரிந்தும் கட்டுமானம் மற்றும் செட் வழக்கு 2 ம் தபசில் சொத்தில் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற அவமதிப்பு செய்துள்ளதால் எனக்கு தண்டனை கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. நான் 5 வருடத்திற்கு முன்பே செட் அமைத்ததாகவும் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடும் சமயத்தில் எடுத்து வைத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

நான் இடையீட்டு மனு எண் 3/2022 உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பு வழக்கு சொத்து இருந்தது போலவே அமைக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்த மனு அனுமதிக்கக்கூடியது என்றால் சரியல்ல.